**<u>பதிவஞ்சல் ஒப்புதல் அட்டையுடன்</u>**

**பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை, இயக்குநர்,**
**சென்னை – 6 அவர்களின் செயல்முறை ஆணை**

**முன்னிலை: மருத்துவர். தி.சி.செல்வவிநாயகம், எம்டி., டிபிஎச்., டிஎன்பி.,**

**ந.க.எண்.44228/ப.தொ.4/2019/இரு3** **நாள்:20.08.2023**

பொருள்: பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத்துறை– பணியாளர் தொகுதி – தமிழ்நாடு அமைச்சுப்பணி– திரு.து.ராமகிருஷ்ணன் (பிறந்த தேதி 18.06.1992) தா/பெ.(அமரர்) திருமதி சு.கோமதி, கிராம சுகாதார செவிலியர், அரசு ஆரம்ப சுகாதார நிலையம், வைராவிகுளம், திருநெல்வேலி சுகாதாரப்பகுதி மாவட்டம் – 18.12.2009 அன்று பணியிடை மரணம்– கருணை அடிப்படையில் தற்காலிகமாக இளநிலை உதவியாளர் பணி நியமனம் செய்து ஆணையிடப்படுகிறது.

பார்வை:
1. 22.06.2010 நாளிட்ட திரு.து.ராமகிருஷ்ணன் தா/பெ.(அமரர்) திருமதி சு.கோமதி என்பவரின் விண்ணப்பம்.
2. துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள், திருநெல்வேலி அவர்களின் கடித ந.க. எண்.9603/அ3/2009, நாள்: .05.2019 மற்றும் 11.07.2019.
3. அரசாணை (நிலை) 18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை (க்யூ1) நாள்.23.01.2020.
4. இவ்வலுவலக கடித ந.க.எண்.44228/ப.தொ.4/ இரு.3/2019 நாள் 02.09.2021.
5. துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள், திருநெல்வேலி அவர்களின் கடித ந.க. எண்.9603/அ3/2009, நாள்: 21.01.2022
6. அரசாணை (நிலை), 33 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை (க்யூ1) நாள்.08.03.2023.
7. துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள், திருநெல்வேலி அவர்களின் கடித ந.க. எண்.9603/அ3/2009, நாள்: 05.06.2023 மற்றும் 19.07.2023.

*********

**<u>ஆணை:</u>**

பார்வை மூன்று மற்றும் ஆறில் காணும் அரசாணைகளின்படியும் மற்றும் தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம்,2016 பிரிவு 17(1)–ன்படியும், திருநெல்வேலி சுகாதாரப்பகுதி மாவட்டம், வைராவிகுளம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் கிராம சுகாதார செவிலியர் ஆக பணிபுரிந்து 18.12.2009 அன்று பணியிடை மரணமடைந்த திருமதி.சு.கோமதி என்பவரின் மகன் திரு.து.ராமகிருஷ்ணன் என்பவர் தமிழ்நாடு அமைச்சுப்பணியின் கீழ் கருணை

..2

அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் ஊதிய நிலை ரூ.19500 - 62000/- நிலை 8 (Level 8) என்ற சம்பள ஏற்ற முறையில் காலியாகவுள்ள **அரசு ஆரம்ப சுகாதார நிலையம், பத்தமடை, திருநெல்வேலி சுகாதார பகுதி மாவட்டத்தில்** கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு தற்காலிகமாக பணி நியமனம் செய்யப்படுகிறார்.

அ. இவரின் இளநிலை உதவியாளர் பணி நியமனம் தற்காலிகமானது.

ஆ. அரசாணை எண்.29, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை நாள் 7.3.1988-ன் அடிப்படையில் அவர் எழுத்து மூலம் அளித்துள்ள உறுதிமொழியின்படி இவருக்கு அளிக்கப்பட்டுள்ள பணி நியமனத்தில் தவறுகள் ஏதேனும் பிற்காலத்தில் தெரியவந்தால், தனியர் உடனடியாக பணி நீக்கம் செய்யப்படுவார்.

இ. இந்த பணி நியமனம் தொடர்பாக தனியர் அளித்துள்ள விவரங்கள் மற்றும் சான்றுகள் தவறானவை என எதிர்காலத்தில் தெரிய நேரிட்டால் இவர் எவ்வித முன்னறிவிப்பு இன்றி பணி நீக்கம் செய்யப்படுவார்.

ஈ. நியமனதாரர் பணியேற்கும்போது அவரது பாஸ்போர்ட் அளவு புகைப்படம் இரண்டு மற்றும் குடிமுறை மருத்துவர் (civil Surgeon) நிலைக்குக் குறையாத மருத்துவரிடமிருந்து உடற்தகுதிச் சான்றிதழுடன் சம்பந்தப்பட்ட அலுவலர் முன் ஒப்படைத்து பணியேற்குமாறும் அறிவுறுத்தப்படுகிறது.

உ இவரின் தற்காலிக பணிநியமனம் அரசின் பணிவரன்முறை ஆணைக்குட்பட்டது

ஊ இவர் பணியேற்ற நாளிலிருந்து இரண்டு வருடகாலத்திற்குள் தகுதிகாண் பருவத்தினை மூன்று ஆண்டுகால அவகாசத்திற்குள் திருப்திகரமாக முடித்திடல் வேண்டும்.

எ. இவர் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்த விவர அட்டையினை பணியில் சேர்ந்த உடன் அசலாக சம்பந்தப்பட்ட துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் அவர்களிடம் ஒப்படைக்கக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

ஏ. இவர் அரசுப் பணியாளர் பயிற்சி நிலையம், பவானிசாகரில் அளிக்கப்படும் இளநிலை உதவியாளர்களுக்கான பயிற்சியினை தகுதிகாண் பருவம் முடிப்பதற்குள் முடித்திடல் வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

..3

ஐ. இவர் தமிழ்நாடு அமைச்சு பணி விதி 30(b) – ன்படி பதவி உயர்வினை முதுநிலை வரிசையின்படி பெறுவதற்கு கீழ்க்காணும் துறைத்தேர்வுகளில் தேர்ச்சிப் பெற்றிருக்க வேண்டும்:–

1. சார்நிலை பணியாளருக்கான கணக்குத் தேர்வு பகுதி –1
2. தமிழ்நாடு அலுவலக நடைமுறை நூல் தேர்வு
3. மருத்துவ விதித்தொகுப்பு நூல் தேர்வு

ஒ. இவர் பணி நியமன ஆணை பெறப்பட்ட 15 நாட்களுக்குள் பணியமர்த்தல் ஆணையில் குறிப்பிட்டுள்ள பணியிடத்தில் இளநிலை உதவியாளர் பணியில் இணையுமாறு தனியர் அறிவுறுத்தப்படுகிறார். தவறும் பட்சத்தில் இவரின் பணிநியமன ஆணை ரத்து செய்யப்படும் என்பதும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**தி.சி.செல்வவிநாயகம்**
இயக்குநர்
பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு
மருந்துத்துறை, சென்னை–6

பெறுநர்
திரு.து.ராமகிருஷ்ணன்,
தா/பெ.(அமரர்) திருமதி சு.கோமதி,
36 C, ரகுமான் காலனி,
அம்பாசமுத்திரம்,
திருநெல்வேலி மாவட்டம் –627401
நகல்
துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள், திருநெல்வேலி
வட்டார மருத்துவ அலுவலர், அரசு ஆரம்ப சுகாதார நிலையம், வைராவிகுளம் மற்றும் பத்தமடை திருநெல்வேலி சுகாதாரப்பகுதி மாவட்டம்.
இவ்வலுவலக பணியாளர் தொகுதி 4 பிரிவு இருக்கை 4.
இருப்புக்கோப்பு/உபரி.

// உண்மை நகல் உத்தரவின்படி அனுப்பப்படுகிறது //

தே.நி.கண்காணிப்பாளர்
21/08/2023